E.A.No. 12/2022 in E.P.No: 34/2019

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்.10.12.2024

ம.சா.1 – முரளிகிருஷ்ணன் த.பெ – வெங்கட்

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –**

எனது மனுவில் சொல்லப்பட்டுள்ள சொத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து வாங்கியுள்ளேன். கடந்த 28.07.2021ல் கிரையம் பெற்றுள்ளேன். நான் கிரையம் பெற்ற சர்வே எண்.373. நான் கிரையம் வாங்கும் போது வில்லங்கம் பார்த்தேனா என்றால் அரசாங்கத்திடம் இருந்து கிரையம் பெற்றததால் பார்க்கவில்லை. நிறைவேறுதல் மனுவின் விபரம் எனக்கு தற்போது தெரியுமா என்றால் நீதிமன்ற ஊழியர் நான் குடியிருக்கும் இடத்தை காலி செய்ய சொன்ன போது தான் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள மனுவில் என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்றும், எனக்கு விடுவித்து கொடுக்கும்படி கோரியுள்ளேன். நான் தாக்கல் செய்த மனுவில் மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்ற விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. நான் கிரையம் பெற்ற மனு சொத்தை மட்டும் நிறைவேறுதல் நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்ககோரி கேட்டுள்ளேன். மனு சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை கோராமல் நிறைவேற்றுதல் மனுவில் இருந்து விடுவிக்கக்கோருவது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற மனு சொத்து ஏற்கனவே நிறைவேறுதல் மனுவின் மனுதாருக்கு முதல்நிலை மற்றும் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விபரம்

தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி நிறைவேற்றுதல் மனுவின் மனுதாரர் நாகம்மாளை எனக்கு தெரியுமா என்றால் நான் பார்த்ததில்லை. மனு சொத்தின் பழைய சர்வே எண்.104 என்றால் எனக்கு தெரியாது. நான் கிரையம் பெறும்போது மனு சொத்தின் சர்வே எண்.373/1ஏ என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 373/1ஏ வின் பூர்வீக ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் ஆவணங்களை பார்த்துள்ளேன். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் சொத்தை வாங்கும் போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் யாரிடம் எப்படி கைப்பற்றியது என்ற விபரம் நான் தெரிந்து கொள்ளவில்லை. நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யும் போது தான் தெரிந்து கொண்டேன். நான் தாக்கல் செய்துள்ள மனு சொத்து பரமன் மகன் ஆத்தி என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பரமன் மகன் ஆத்தியின் மகன் தான் 1ம் பிரதிவாதி வாழசின்னு என்பது தெரியுமா என்றால் தெரியாது. நான் மனு சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பும், கிரையம் பெற்ற பின்பும் வழக்கிடை சொத்து வாதி, பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் இல்லை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்தது. நான் கிரையம் பெற்ற தாவா சொத்தை நீதிமன்றத்தில் இருந்து அளவீடு செய்ய ஆணையர் மற்றும் வருவாய் துறையினர் பார்வையிட்டு அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு பாத்தியப்பட்ட சொத்தை அளவீடு செய்த பின்பும் நான் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் என்ன விபரம் என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. அவ்வாறு கேட்காமல் எந்த அடிப்படையில் எனது மனுவில் வீட்டு வசதி வாரியம் யாரிடம் எப்போது கையகப்படுத்திய விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் எனது

வழக்கறிஞரிடம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். எனது மனுவில் கூறியுள்ள வேல்முருகன், செந்தில்வேலன், லலிதா, பரதன், உமாகாந்தன், தெட்சிணாமூர்த்தி ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து கிடையாது என்றும், இந்த நிறைவேற்றுதல் மனுவில் உள்ள வாதி, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் வீட்டு வசதி வாரியம் யாரிடம் இருந்து கையகப்படுத்தப்பட்டது என்று எனக்கு அப்போது தெரியாது. தாவா சொத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1992ல் கையகப்படுத்தியது. எனக்கு பூர்வீக ஊர் விருதுநகர். மனு சொத்துக்களின் விபரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் வீட்டு வசதி வாரியத்தின் சொத்து என்று தெரியும். 1992ல் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தும் போது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கும், வாதி, பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டு காவல்துறையில் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது பற்றி எனக்கு தெரியாது. இந்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளின் குடும்பத்தின் ஏழ்மையை பயன்படுத்தி, அதிகார தோரணையில் காவல்துறையினரின் அதிகாரத்தினால் மனு சொத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்திய விபரம் நான் தெரிந்து கொண்டே பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சொத்தை எனக்கு பாத்தியப்பட்டது என்று தனியாக வழக்கு தாக்கல் செய்து தான் பரிகாரம் கோரமுடியும் என்றும், இடைமனு தாக்கல் செய்து பரிகாரம் கோர முடியாது என்றும் சொன்னால் சரியல்ல. தனியாக வழக்கு தாக்கல் செய்யாமல் நிறைவேற்றுதல் மனுவில் சட்டப்படியான நடவடிக்கைகளில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று பரிகாரம் கோருவதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால்

சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஜெராக்ஸ் ஆவணத்தில் நான் கிரையம் பெற்ற சர்வே எண் உள்ளதா என்றால் உள்ளது. அது யாருடைய பெயரில் உள்ளது என்றால் பரமன் என்பவர் பெயரில் உள்ளது. நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு மேற்படி செட்டில்மெண்டு ரிஜிஸ்டர் பார்த்து தான் வாங்கினேனா என்றால் பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்பட்ட மேற்படி ஆவணமானது சத்திரரெட்டியபட்டி கிராமம் ரீ–சர்வே ரீ–செட்டில்மெண்ட் பைசலாதி ஆவணம் ஆகும். நான் கிரையம் வாங்கிய மனு சொத்து மேற்படி ஆவணத்தின் படி வாதி, பிரதிவாதிகளின் பூர்வீக சொத்து என்பதால் நான் கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மனு சொத்தின் உரிமை குறித்து பிரச்சனை உள்ளதால் தனியாக தான் வழக்கு தாக்கல் செய்ய முடியுமே தவிர நிறைவேற்றுதல் மனுவில் இடைமனு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. நான் மனு சொத்து சம்மந்தமாக உரிமை பிரச்சனை இருப்பதால் நான் கிரையம் பெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், வாதி யாரிடம் இருந்து கையகப்படுத்த பட்டதோ அவர்கள் மீதும், வழக்கு தாக்கல் செய்து தான் பரிகாரம் கோர முடியும் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 17.02.2024ம் தேதிய ம.சா.ஆ1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மனு சொத்தின் உண்மையான உரிமையாளர்களிடம் இருந்து கையகப்படுத்தாமல் முறைகேடாக கையகப்படுத்தியுள்ளதால் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் சட்டப்படியான ஆவணங்கள் கிடையாது என்றால் சரியல்ல.